**தலைப்பு 215 – தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிப்பு திணைக்களம்**

---

1. **நிதிக் கூற்றுகள்**

1.1 **மறுதலிப்பு அபிப்பிராயம்**

தொழிநுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிப்பு திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் தொழிநுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிப்பு திணைக்களத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2020 யூன் 10 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வு சட்டத்தில் 11(2) பிரிவு பிரகாரம் தொழிநுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிப்பு திணைக்களத்திற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 10 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக் கூற்றுகளிலிருந்து 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் தொழிநுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிப்பு திணைக்களத்தின நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3. **நிதிக்கூற்றுக்களிற்கான பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரதும் கணக்கு கொடுக்கும் அலுவலரதும் பொறுப்புக்கள்**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளக நிருவாகத்தை தீர்மானித்தல் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரதும் கணக்கு கொடுக்கும் அலுவலரதும் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தில்38(1) (இ) உப பிரிவு பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதுடன், அந்த முறைமையின் பயன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன்படி முறைமையை பயனுள்ளதாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

----------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கு கொடுக்கும் அலுவலரை அறிவுறுத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

---------------------------------------------------------------------------

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6(1) (ஈ) பிரிவு மற்றும் 38 ஆவது பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் தொடர்புடையதாக உள்ளது,

(ஆ) கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாக உரிய நிதிக் கூற்றுகள் தொடர்பாக என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதிசார் மீளாய்வு

-----------------------

### 2.1 பொறுப்புகள் மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல்

------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| நிதி ஒழுங்குவிதி 94(1) பிரகாரம் (வழங்கல் மற்றும் சேவையல்லாத) ஒதுக்கீடுகளை விஞ்சி பொறுப்புகளை மேற்கொள்ளாதிருத்தல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் மேற்கொண்ட மாதிரி பரிசோதனையில் 11 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக ஒதுக்கீடுகளை விஞ்சி ரூபா. 4,783,616 ஆன பொறுப்புகளை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | நிதி ஒழுங்குவிதி 94(1) படி ஒதுக்கீடுகளை விஞ்சி உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதலாகாது | தேவையான செலவினங்களை மேற்கொள்ள நேரிடுதல். |

2.2 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| இரண்டு வைப்பு கணக்குகளின்கீழ் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 38 சந்தர்ப்பங்களுக்கு ஏற்புடையதாக காலம் கடந்த வைப்புகளின் பெறுமதி ரூபா. **4,327,064** ஆகும். | 2 ஆண்டுகள் கடந்த வைப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 571 இன் ஏற்பாடுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |

3. தொழில்பாட்டு மீளாய்வு

3.1 சொத்துக்களின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| தொழிநுட்ப தொழில் வல்லுநர்களை பயிற்றுவிக்கும் நிறுவனத்திடமிருந்து (TITP) சுவிகரிக்கப்பட்ட நிலையான சொத்துகளுக்கு ஏற்புடையதாக 2018 ஆம் ஆண்டு தொடக்கம் பொருட் ஒப்பாய்வுகளை மேற்கொண்டு அந்த அறிக்கைகளை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | எல்லா பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் பொருட்டு ஒப்பாய்வுகளை மேற்கொண்டு அறிக்கைகளை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. | பதில் வழங்கப்படவில்லை . |

**3.2 செயலாற்றுகை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | **2018,2019** ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்கு ஏற்புடையதாக வெளியிடப்பட்டு முடிவுறுத்தியுள்ள பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான விபரங்களை கணக்காய்வில் சமர்ப்பிக்கப்படவில்லை. | இற்றைப்படுத்திய தகவல் முறைமை பராமரித்தல் வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை |
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டில் கட்டணம் அறவிடப்படாத கற்கைநெறிகள் மற்றும் கட்டணம் அறவிடப்பட்டு நடாத்தப்படும் 18 கற்கைநெறிகள் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை ஒழுங்குமுறையில் **30,724**, ம் மற்றும் **4875** ஆகியதுடன், அதில் கற்கைநெறிகளை விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒழுங்குமுறையில் **7,240** ம் மற்றும் **1832** ஆகியதால் கற்கைநெறிகளை விட்டுச் செல்லும் சதவீதம் ஒழுங்குமுறையில் **24** % மற்றும் **37**% என்ற வகையில் காணப்பட்டது. | மாணவர்கள் கற்கைநெறிகளை விட்டுச் செல்வதற்கான காரணங்களை அடையாளம் காணப்பட்டு அதனை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. | பதில் வழங்கப்படவில்லை |

**3.3 முகாமைத்துவ குறைப்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| **2019** திசெம்பர் **31** திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட அரச அலுவலர்களின் முற்பண ‘‘பி’’ கணக்கு பிரகாரம், திணைக்களத்து சேவையில் ஈடுபட்டிருந்த அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா. **11,986,353** ஆன மீதி தவிர்ந்து அறவிட வேண்டியிருந்த தனிப்பட்ட கடன் நிலுவை மீதி மொத்தம் ரூபா. **5,036,988** ஆனதுடன், | நிதி ஒழுங்குவிதி மற்றும் சுற்றுநிருப ஆலோசனைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு கடன் மீதிகளை அறவிடுவதற்கும் சீராக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அறவிடுவதற்கும் பதிவழிப்பதற்கும், சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

அதில் ரூபா. **1,958,828** தொகை 05 ஆண்டுகளுக்கு மேலான பழைமையான கடன் மீதியாக காணப்பட்டது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதியில் 350 ஆனதுடன், அதன்கீழ் பொதுவான நிருவாகத்திற்கு தேவையான மேலதிக பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர், தொழிநுட்ப அலுவலர், முகாமைத்துவ உதவியாளர் போன்ற 23 பதவி பெயர்களுக்கு ஏற்புடையதாக 109 வெற்றிடங்கள் காணப்பட்டன. | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |
| (ஆ) | 39 தொழிநுட்பவியல் / தொழிநுட்ப கல்லூரிகளில் கல்விசார் மற்றும் கல்விசாரா அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பணியாற்தொகுதியில் ஒழுங்குமுறையில் **1347** மற்றும் **2130** ஆனதுடன், உண்மையான பணியாற்தொகுதி ஒழுங்குமுறையில் **651** மற்றும் **1415** ஆகியதால் வெற்றிடங்கள் ஒழுங்குமுறையில் **696** மற்றும் **859** என்ற வகையில் காணப்பட்டது. | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை . |